இணுவையெம் பதியிலே இருந்திடும் கணபதி இன்னல்கள் தீர்த்திடுவாய்
எங்கள் அனுமதியின்றியே வரும்பகையாவையும் அலறிடச் செய்திடுவாய் 2
அழகாய் இருந்திடும் பிள்ளையார் பரராசேகர பிள்ளையார்
வளமான அணுவிலின் பிள்ளையார் வருங்காலம் நமக்கென செய்குவார்

இணுவையெம் பதியிலே இருந்திடும் கணபதி இன்னல்கள் தீர்த்திடுவாய்

ஓம்கார நாதத்தில் இவன் இருப்பான்
தன் உருவத்தில் பிரவஞ்ச பொருள் உரைப்பான் 2
சாம்பலும் உயிர் பெற விழி திறப்பான்
பசும்சாணியில் வந்துமே அருள் சுரப்பான் 2

இணுவையெம் பதியிலே இருந்திடும் கணபதி இன்னல்கள் தீர்த்திடுவாய்

உலகங்கள் முழுதுக்கும் இவன் முதல்வன்
விழி உருகிட துதிர்ப்போர்க்கு இவன் புதல்வன் 2
கலகங்கள் யாவையும் இவன் தொலைப்பான்
நெஞ்சில் காயங்கள் ஆறிட மருந்தளிப்பான் 2

இணுவையெம் பதியிலே இருந்திடும் கணபதி இன்னல்கள் தீர்த்திடுவாய்

மலர் தூவ வருவோரின் மனம் படியும்
இவன் மணியோசை கேட்டேதான் அயல் விடியும் 2
பலர் கூடி தொடும் போது தேர் அசையும்
அந்த தேர் மீது பரராசன் கொடி அசையும் 2

இணுவையெம் பதியிலே இருந்திடும் கணபதி இன்னல்கள் தீர்த்திடுவாய்
எங்கள் அனுமதியின்றியே வரும்பகையாவையும் அலறிடச் செய்திடுவாய் 2
அழகாய் இருந்திடும் பிள்ளையார் பரராசேகர பிள்ளையார்
வளமான அணுவிலின் பிள்ளையார் வருங்காலம் நமக்கென செய்குவார்

இணுவையெம் பதியிலே இருந்திடும் கணபதி இன்னல்கள் தீர்த்திடுவாய்